இணைப்பு 'B'

**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்**

**வெளிநாடுகளில் தரித்திருக்கும் இலங்கையர்களுக்கான முக்கிய அறிவித்தல்**

2015 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 35(அ) பிரிவின் பிரகாரம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால், இலங்கையில் கடவுச்சீட்டிற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து உயிர்மானத் தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், 2017 நவெம்பர் 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்கள் ஊடாக கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ள கடவுச்சீட்டு உரிமையாளர்களிடமிருந்து அவர்களது கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான புதிய நடைமுறையொன்று திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்படுகின்றது. இந்த நடைமுறையின் கீழ் 16 – 60 வயதுத் தொகுதிக்குரிய ஒவ்வொரு கடவுச்சீட்டு உரிமையாளரும், இலங்கைக்கு வருகை தரும் முதற் சந்தர்ப்பத்தில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடம் அவர்களது உயிர்மானத் தரவுகளைப் (கைவிரல் அடையாளம்) பெற்றுக் கொடுப்பது கட்டாயமாகும்.

அதற்கமைய,

❖ நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன் நீங்கள் கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுவதுடன், இத் தேவையைப் பூர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் நீங்கள் நாட்டிலிருந்து வெளியேறுவது தடைப்படும்.

❖ திணைக்களத்திற்கு கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொடுக்க ஏதுவாக, போதிய காலத்தை அதற்காக ஒதுக்கிக் கொள்ளக் கூடியவாறு, உங்களது பிரயாணத்தை ஆயத்தப் படுத்திக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

❖ திணைக்களத்தின் பொதுவான கடமை நாட்களான திங்கள் முதல் வெள்ளி வரை (அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த) மு.ப. 8.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை, உங்களுக்கு உங்களது கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

**உயிர்மானத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் முறை**:

படிமுறை 1: நாட்டிற்குள் பிரவேசிக்கும் போது நீங்கள் நேரடியாக பிரதான குடிவரவு உத்தியோகத்தரிடம் **(Senior Authorized Officer)** அறிவிப்புச் செய்யலாம். அவ்வாறில்லையெனில், குடிவரவு, குடியகல்வு கருமபீடத்தில் **(Immigration Counter)** கடமையிலிருக்கும் குடிவரவு உத்தியோகத்தரினால் கடவுச்சீட்டு உரிமையாளரை பிரதான குடிவரவு உத்தியோகத்தரிடம் முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

படிமுறை 2: பிரத்தியேகமான இலக்கமொன்றைக் கொண்ட உயிர்மானத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் படிவம் **(BDA)** இரண்டு பிரதிகளைக் கொண்டதாக, பிரதான குடிவரவு உத்தியோகத்தரினால் கடவுச்சீட்டு உரிமையாளருக்கு விநியோகிக்கப்படும். இப் படிவங்கள் இரண்டிலும் நீங்கள் கையொப்பம் இட வேண்டும் என்பதுடன், அவற்றுள் ஒன்று உங்களுக்கு திருப்பிப் பெற்றுத் தரப்படும். உயிர்மானத் தரவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக, அப் படிவத்தை **(BDA)** நீங்கள் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

படிமுறை 3: திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக தொடரறா முறை **(Online)** ஊடாக ஒதுக்கிக் கொள்ளும் நடைமுறை ஊடாக கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக, உங்களுக்கு வசதியான திகதியொன்றையும், நேரத்தையும் ஒதுக்கிக் கொள்ளலாம்.

அவ்வாறில்லை எனில், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது பிராந்திய அலுவலகங்களுள் ஒன்றிற்கு வருகை தந்து டோக்கன் இலக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும்.

படிமுறை 4: குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது பிராந்திய அலுவலகங்களுள் ஒன்றிற்கு வருகை தந்து, வெளிநாட்டுத் தூதரகப் பிரிவில் கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளும் கருமபீடத்திற்கு வந்து ஏற்கனவே உங்களிடமுள்ள உயிர்மானத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் படிவத்தை **(BDA)** ஒப்படைக்கவும்.

படிமுறை 5: உத்தியோகத்தர்களினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு அமைய கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொடுக்கவும். கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையை மேற்கொண்டு முடிப்பதற்காக செலவாகும் காலம் சுமார் 45 நிமிடங்களாகும்.

படிமுறை 6: கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொடுக்கும் பணி நிறைவடைந்ததன் பின், உயிர்மானத் தரவுகள் வெற்றிகரமாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை உறுதி செய்து கொள்வதற்காக உயிர்மானத் தரவு பிரகடனம் கடவுச்சீட்டு உரிமையாளருக்கு விநியோகிக்கப்படும். அதே போன்று, இந் நடைமுறை முற்றுப் பெற்றதன் பின், உங்களுக்கு இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு ஏதுவாக எல்லைக் கட்டுப்பாட்டு முறைமையினுள் உங்களது கடவுச்சீட்டு தன்னியக்கமாக செயற்படுத்தப்படும்.

உயிர்மானத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதுடன் தொடர்புடைய புதிய நடைமுறை தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் www.immigration.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.

அதே போன்று, உங்களுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டுத் தூதரகத்துடன் அல்லது திணைக்களத்தின் பிரதான அலுவலகத்துடன் அல்லது பிராந்திய அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| **அமைவிடம்** | **முகவரி** | **தொலைபேசி இல.** |
|---|---|---|
| கொழும்பு | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,<br>பிரதான அலுவலகம்<br>வெளிநாட்டுத் தூதரகப் பிரிவு,<br>ஆம் மாடி 2,<br>“சுகுறுபாயா”, □ரீ சுபூத்திபுர வீதி,<br>பத்தரமுல்லை. | +94-11-5329230 |
| மாத்தறை | இல. 9, □ரீ விஜய கட்டிடம்,<br>ராகுல வீதி, மாத்தறை. | +94-41-5412212 |
| கண்டி | இல. 42/3,<br>□ரீ சங்கராஜ மாவத்தை, கண்டி. | +94-81-5624470/ +94-81-5624509 |
| வவுனியா | இல. JC 23,<br>சுற்றுவட்ட வீதி, வவுனியா. | +94-25-5676344 |
| குருணாகல் | இல. 129, தம்புள்ளை வீதி, குருணாகல். | +94-37-5550562+ /94-37-5550563 |